
# திராவிடப் போராளிகள்

36 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## ரங்கம்மாள் சந்தித்த ரணம்!



ஓவியம் : ரவி பேலட்

*1934*-ஆம் ஆண்டு ஜனவரி 28 அன்று வெளியான '**புரட்சி**' ஏட்டில் 'திருவண்ணாமலை இரகசியம்' என்ற கட்டுரையை எழுதியவர் 'பேராயம்பட்டு தோழர் டி.ரங்கம்மாள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராயம்பட்டு என்பது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம் ஆகும். அந்த ஊரிலிருந்து ஒரு பெண் திருவண்ணாமலை திருவிழாக் காலங்களில் நடக்கும் மோசமான நடவடிக்கைகளைப் பற்றித் துணிந்து பத்திரிகையில், அதுவும் நாகம்மையாரை பதிப்பாளராகக் கொண்டு தந்தை பெரியார் தொடங்கிய 'புரட்சி'யில் எழுதியது வியப்பைத் தருகிறது.

அடுத்த இருபதாண்டுகளில் சென்னை உயர்நீதி மன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு (டிவிஷன் பெஞ்ச்) 1956 -ஆம் ஆண்டு வழங்கிய ஒரு தீர்ப்பில் இந்த ரங்கம்மாள் பெயரையும் அவர் யார் என்பதையும் பற்றி, விரிவாகக் குறிப்பிட்டது இன்னும் வியப்புக்குரியது.

அந்தத் தீர்ப்பின் முதல் பத்தியில், 'இவ்வழக்கின் ரங்கம்மாள் 'ரெட்டியார்' ஜாதியைச் சேர்ந்த விதவை; சிதம்பரமும் மனைவியை இழந்தவர் நாட்டுக்கோட்டை செட்டியார் ஜாதியைச் சேர்ந்தவர்' என்றிருந்தது.

இவர்கள் இருவருக்கும் நடந்த சுயமரியாதைத் திருமணம் செல்லுமா? அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் சட்டப்படியான வாரிசுகளா? அவர்களின் பிள்ளைகளுக்கு வாரிசு, சொத்துரிமை உண்டா உள்ளிட்ட கேள்விகள் ஆழமாக விவாதிக் கப்பட்டன. சாஸ்திரங்களும் சட்டங்களும் அலசப்பட்டன. தீர்ப்பின் முடிவோ அனைத்தை யும்விடப் பரபரப்பானது. தீர்ப்பை அறிவதற்கு முன் ரங்கம்மாள் வரலாற்றைத் தெரிந்து கொள்வோம்.

### ஒளித்து வைத்துப் படித்த இதழ்

திருவண்ணாமலை மாவட்டம், பேராயம்பட்டுக் கிராமத்தில் பக்தியும் பழமையும் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர் ரங்கம்மாள். துணிவும் சுறுசுறுப்பும் பிடிவாதமான மன உறுதியும் கொண்ட ரங்கம்மாளுக்கு வைதீக முறைப்படி குழந்தைத் திருமணம் நடந்தது. அந்தக் குழந்தைக்கு ஏழு வயதானபோது கணவன் இறந்துவிட்டான். விதவைச் சடங்குகள் செய்யப்பட்டு வீட்டுக்குள்ளே முடக்கப்பட்ட ரங்கம்மாளுக்கு சில ஆண்டுகள் கல்வியும் வழங்கப்பட்டது. பருவம் அடைந்தபின் அதுவும் நின்றுபோனது.

ரங்கம்மாளின் வீட்டுக்கு வரும் பெரியவர்கள், பெண்கள் உரிமை கேட்கும் அநாசாரம் பரவுவதைக் கண்டித்தும் சுயமரியாதை இயக்கத்தையும் பெரியாரைத் தூற்றுவதையும் கேட்டுச் சிந்திக்கத் தொடங்கினார் ரங்கம்மாள். 'குடிஅரசு' என்ற பத்திரிகையின் பெயரைக் கேள்விப்பட்டு, எப்படியோ யாரையோ பிடித்துத் தன் சேமிப்புக் காசைக் கொடுத்து அந்த இதழை வாங்கிப் படிக்கத் தொடங்கினார்.

அறிவுலகின் வெளிச்சம் பட முடியாத மறு முனையில் தானிருப்பதை உணர்ந்தார். தொடர்ந்து 'குடிஅரசு', 'புரட்சி' ஏடுகளை வாங்கி ஒளித்து வைத்துப் படித்தார். அதுமட்டுமா? தானே ஒரு கட்டுரையும் எழுதி எப்படியோ அனுப்பியும்விட்டார். அந்தக் கட்டுரைதான் மேலே கூறியபடி 'புரட்சி' இதழில் வெளிவந்தது.

### பிரச்சாரத்துக்குப் போவதே பொழுதுபோக்கு

'புரட்சி'யின் வெளியீட்டாளரான நாகம்மையாருக்கு ரங்கம்மாள் தன் துயர நிலையை விளக்கிக் கடிதம் எழுதினார். வாழ்வுரிமைக்காகப் போராடிய பெண்களின் புகலிடமாக விளங்கிய அன்னை நாகம்மையாரின் இல்லமும் உள்ளமும் ரங்கம்மாளுக்கும் அடைக்கலம் தந்தன. தன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஈரோடு சென்றுவிட்டார் ரங்கம்மாள்.

நாகம்மையாரின் அடுத்தப் பணி தொடங்கியது. ரங்கம்மாளுக்கு உரிய மாப்பிள்ளையைத் தேடத் தொடங்கினார். அதே காலக் கட்டத்தில் 'குடிஅரசு' ஏட்டின் ஆதரவாளராக இருந்த கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் இரண்டு முறை திருமணம் செய்து இரு மனைவிகளும் இறந்துவிட்ட நிலையில், துணையின்றி இருந்தார்.

நாகம்மையாரின் முயற்சிக்கு செட்டிநாட்டுச் சீர்திருத்த முன்னோடிகளின் ஆதரவு கிடைத்தது. துணையை இழந்த இருவரும் திருமணம் மூலம் இணைவதற்கு, 'புரோகித மறுப்புச் சங்கம்' ஏற்பாடு செய்தது. அந்தத் திருமணம் ஒரு பூங்காவில் நடைபெற்றது. திருமணத்துக்குப் பின் பெரும்பாலான நேரம் தந்தை பெரியாரின் பிரச்சாரத்துக்கு உடன் செல்வது இருவருக்கும் பிடித்த பொழுதுபோக்காக அமைந்தது.

### கொள்கையால் வளர்க்கப்பட்ட குணமகள்

செல்வந்தரான சிதம்பரம் அவர்களுக்கு ஏராளமான சொத்துகள் இருந்தன. மேலும் அவரது முதல் மனைவியின் மூலம் பிறந்த திருமண வயதை நெருங்கிய ஒரு மகன் இருந்தார். அவருக்கும் தெய்வானை ஆச்சி என்ற பெண்ணுக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். பின் சொத்துகளை அவர்களது பாதுகாப்பில் விட்டு 'மலாக்கா' சென்று தொழில் தொடங்கினார் சிதம்பரம்.

அவர் ரங்கம்மாள் மூலம் மேலும் இரண்டு ஆண்பிள்ளைகள், இரண்டு பெண் பிள்ளைகளைப் பெற்று அவர்களையும் கொள்கை வழியில் அந்தத் தம்பதியினர் வளர்த்தனர். பின்னாளில், அவர்களின் மூத்தப் பெண்ணுக்கு தந்தை பெரியாரும் அன்னை மணியம்மையாரும் மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். செல்வச் செழிப்பில் வளர்ந்த அந்தப் பெண்ணும் திருமணத்துக்குப் பின் கணவருடன் சேர்ந்து தந்தை பெரியாரின் சுற்றுப் பயணத்தில் பங்கேற்று அன்னை மணியம்மையாருடன் பொதுக்கூட்டத்தில் புத்தகக் கடையில் அமர்ந்து புத்தக விற்பனை செய்தார்.

**நாம் அடைந்துள்ள ஒவ்வொரு உரிமைக்குப் பின்னாலும் இத்தகைய போராளிகள் பட்ட அவமானங்களே படிக்கற்களாக இருக்கின்றன.**

அத்தகைய கொள்கையாளராக ரங்கம்மாள் அவர்களால் வளர்க்கப்பட்ட பெண்தான் மோகனா அம்மையார். அவருக்கு தந்தை பெரியார் பார்த்து திருமணம் செய்து வைத்த மணமகன்தான் அன்று கி.வீரமணி எம்.ஏ. இன்று திராவிடர் கழகத் தலைவர், விடுதலை 'ஆசிரியர்' கி. வீரமணி எம்.ஏ, பி. எல் . அவர்கள்.

### இன்னல் தந்த இந்துச் சட்டம்

சிதம்பரம் - ரங்கம்மாள் குடும்பம் இரண்டாம் உலகப்போர் வெடித்த பிறகு மலாக்காவை விட்டு வரமுடியாத நிலையில், இந்தியாவில் உள்ள சொத்துகளை சிதம்பரம் அவர்களின் (காலமான) முதல் மனைவி மூலம் பிறந்த மகனும் மருமகளும் பராமரித்து வருகிறார்கள் என்று நம்பினார்கள். அந்த மகன் எதிர்பாராமல் இறந்துவிட்டார்.

போர் முடிந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தபோது மருமகள் தெய்வானை ஆச்சி சொத்துக்களையும் நகைகளையும் திருப்பிக் கொடுக்க மறுத்தார். சிதம்பரம் தனக்கும் மகன்களுக்கும் பாகம் உண்டு என்று வழக்குத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வழக்கில் சிதம்பரம் அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்ததால், அவரது மருமகள் தெய்வானை ஆச்சி சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த மேல் முறையீடு வழக்கில் உயர்நீதிமன்றம் ரங்கம்மாள் - சிதம்பரம் ஆகியோருக்கு நடந்த சுயமரியாதைத் திருமணமே சட்டப்படி செல்லாது என்று அறிவித்துவிட்டது.

மேலும் "சிதம்பரம் நாட்டுக்கோட்டைச் செட்டியார் எனும் தனவைசியர் சமூகத்தைச் சேர்ந்தவர். ஆனாலும், இந்து தர்ம சட்டப்படி அவர் சூத்திரரே. ஒரு சூத்திரன் தனது நிரந்தர வைப்பாட்டியின் மூலம் பிறந்த பிள்ளைகளுக்கும் பங்கு கொடுக்கலாம்'' என்பதே தீர்ப்பின் சுருக்கமாகும்.

எனில், ரங்கம்மாள் மனைவி இல்லையா என்ற கேள்வி எழுகிறதல்லவா? இல்லை என்றது இந்துச் சட்டம்.

ரங்கம்மாள் அவர்கள் இந்தத் தீர்ப்பை ஏற்கவில்லை. அவர் மனம் குமுறியது. உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யவேண்டும் என்று முனைந்தார். சொத்தைவிட சுயமரியாதையே முக்கியம் என்றார். ஆனால், ஏற்கெனவே உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையில்தான் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. எனவே மேல்முறையீடு பயன் தராது என்று சட்ட வல்லுநர்கள் கூறிய அறிவுரையின்படி தன் முடிவைக் கைவிட்டார். எனினும் தனது சட்டப்படியான தகுதிநிலை குறித்த இந்துச் சட்டத் தீர்ப்பு அவர் மனதில் ஆறாத காயமாகவே இருந்தது.

*1967*-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டின் ஆட்சியில் அமர்ந்த பின் முதல்வர் அண்ணா அவர்கள் நிறைவேற்றிய சுயமரியாதைத் திருமணச் சட்டம் இந்துத் திருமணச் சட்டத்தின் பிரிவு 7-இல் இணைக்கப்பட்டது. சட்டம் நிறைவேறுவதற்கு முன் நடந்த திருமணங்களும் செல்லும் என்ற சிறப்பும் கிடைத்தது. ரங்கம்மாள் அம்மையார் போன்ற பல ஆயிரம் போராளிகளின் மனக்காயத்தை அந்த சட்டம் மூலம் ஆற்றினார் பேரறிஞர் அண்ணா.

நாம் அடைந்துள்ள ஒவ்வொரு உரிமைக்குப் பின்னாலும் இத்தகைய போராளிகள் பட்ட அவமானங்களே படிக்கற்களாக இருக்கின்றன என்பதே அம்மையார் ரங்கம்மாள் சிதம்பரம் அவர்களின் வாழ்க்கை தரும் பாடம்.

(வருவார்கள்...)

### உயர்கல்வியில் பஜனை!

**யு**.ஜி.சி. என்கிற பல்கலைக்கழக மானியக் குழு ஆசிரியர் பயிற்சிக்காக ஒரு கையேட்டை வெளியிட்டிருக்கிறது. அதன்படி, கல்லூரி ஆசிரியர்கள் 'பகவத் கீதை' போன்ற இந்து சமய புனித நூல்களைப் படிக்க வேண்டும். குருகுலம், குரு சிஷ்ய பாரம்பரியம் போன்றவற்றிலும் பயிற்சி பெற வேண்டும். மேலும் தர்மா, புண்யா, ஆத்மா, கர்மா, யக்னா, ஷக்தி, மோக்ஷா, லோகா, தனா, இதிஹாசா, புராணா போன்ற மொழிபெயர்க்க முடியாத கருத்தியல்களையும் படிக்க வேண்டும்.

ஏற்கெனவே 'விஷ்வகர்மா திட்டம்' என்கிற பெயரில் குலத் தொழிலுக்குள் மக்களைத் தள்ளும் முயற்சியுடன் இதுவும் சேர்ந்து கொண்டால், ஆசிரியர்களும், மாணவர்களும் குடுமி வைத்துக்கொண்டு பஜனை செய்ய வேண்டியதுதான்.

இந்த சனாதன க்ரூப், வேறு கல்வியை விட்டு விட்டு இந்தப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களிடம் தம் பிள்ளைகளை அனுப்பி, சனாதனத்தைக் காப்பாற்ற முன் வருமென்று ஆவலோடு காத்திருக்கிறோம்.

-பத்திரிகையாளர் விஜயசங்கர்
ஃபேஸ்புக் பதிவு

### ஃப்ளாஷ்பேக்



1989-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் தளபதி அவர்கள் மதுரைக்கு வருகை தந்த போது இப்படம் எடுக்கப் பட்டது. தலைவர் தளபதியுடன் முன்னாள் அமைச்சர் வே.தங்க பாண்டியன், மு.க.அழகிரி, சிறுவயது குழந்தையாக துரை தயாநிதி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



குட்லி ஆண்டியப்பன்

-எ.ஆர்.சி.குட்லி ஆண்டியப்பன்
மதுரை

#### மதுரைப் பிரச்சாரம்!

**எ**ன் தந்தை ஏ.ஆர்.சந்திரன் அவர்கள் பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்று கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்து அவர்களுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### தணிக்கைக்குத் தனியாகப் போராட்டம்!

**1976-ஆம் ஆண்டு ஜூன் மூன்றாம் நாள், தனது பிறந்த நாளையொட்டி முரசொலியில் கடிதம் எழுதினார் கலைஞர். அப்போது பத்திரிக்கை தணிக்கை காலம். கலைஞரின் கடிதமும் தணிக் கைக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கடிதத்தில் "என் அன்னையை விட அதிக அன்பை அண்ணா என் மீது பொழிந்தார்'' என்று ஒரு வாசகம் இருந்தது. அந்த வாசகத்தை வெட்டி விட வேண்டும் என தணிக்கை அதிகாரி உத்தரவிட்டார். அதற்கான காரணத்தையும் விளக்கவில்லை. அதற்கு எதிராக துண்டு பிரசுரம் அச்சடித்து அண்ணா சாலையில் தனி ஆளாக விநியோகித்தார் கலைஞர்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 253




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.